Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
| --- | --- | --- |
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 3-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 69

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 7 ஆம் நாள் முஹர்ரம் 7 (20-5-64) புதன்கிழமை இதழ் 99

# இடதுசாரித்தலைவர்கள் பிரதமரை சந்தித்தனர்

## மந்திரிசபை கூடியபின் கூட்டாட்சி பற்றி பேசினர்

கொழும்பு, செவ்வாய்

இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, திரு. பிலிப் குணவர்த்தன, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோரும் சமசமாஜக் கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. லெஸ்லி குணவர்த்தனவும் இன்று மாலை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்து கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். இடதுசாரித் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு வருமாறு பிரதமர் சிறிமா அழைத்திருந்தார். பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

### மந்திரிசபை ஆலோசனை

இடதுசாரித் தலைவர்களைச் சந்திப்பதற்கு முன்னர் கூட்டு அரசாங்க அமைப்புப் பற்றி தமது மந்திரிகளுடன் பிரதமர் ஆலோசனை நடத்தினர். மந்திரிசபைக் கூட்டம் பிரதமரின் வாசஸ்தலமான 'அலரிமாளிகை'யில் நடைபெற்றது. கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த கொள்கைத் திட்டத்தை மந்திரிகளின் முன் பிரதமர் சமர்ப்பித்து அத்திட்டம் பற்றிய தமது கருத்தையும் வெளியிட்டார் என்று தெரிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைத் திட்டத்தை ஏற்பவர்களைச் சேர்த்தே கூட்டு அரசாங்கம் அமைக்கவேண்டுமென்றும் இடதுசாரி முன்னணியின் கொள்கைத் திட்டத்தை ஏற்கக்கூடாதென்றும் சில மந்திரிகள் தெரிவித்ததாகத் தெரிகிறது.

## கட்டாய ஓய்வு உத்தரவின் விளைவுகள்

### சமசமாஜத் தலைவருடன் தமிழரசுக்கட்சி ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

கட்டாய ஓய்வு உத்தரவு அமுல் சம்பந்தமாகத் தோற்றியுள்ள நிலைபற்றியும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள்பற்றியும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

சிங்களத்தில் தேர்ச்சிபெறவில்லையென்பதற்காக மூன்று மாத அறிவித்தலில் உத்தியோகத்திலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யும் உத்தரவுகள் இதுவரை 50 தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அப்பீல் முடிவு வெளியாகும்வரை சிங்களச் சட்ட அமுல் சம்பந்தமாக மேற்கொண்டு எவ்வித நடவடிக்கை எடுப்பதற்கும் தாம் ஆலோசனை கூறக்கூடிய நிலையில் இல்லையென அட்டோர்ணி ஜெனரல் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னரும் கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுவருவது தமிழ் அரசாங்க ஊழியர் மத்தியில் பீதியை உண்டுபண்ணியுள்ளது.

இந்தக் கட்டாய ஓய்வு உத்தரவு வழங்குவதை நிறுத்தும்படியும் இது விஷயத்தில் தலையிடும்படியும் கோரி பிரதமருக்கு திரு. செல்வநாயகம் இவ்வாரம் கடிதம் எழுதவிருக்கிறார்.

இதற்கிடையில் கட்டாய ஓய்வு உத்தரவுகளை வாபஸ் பெறச் செய்வதற்கு லங்காசமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடுவதில் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மொழிப் பிரச்னையில் தமது குறைந்தபட்சக் கோரிக்கை பற்றியும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு விளக்கிக் கூறி அவைகளின் ஒத்துழைப்பையும் தமிழரசுக்கட்சி பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுமெனத் தெரிகிறது.

## நிந்தாவூர், அக்கரைப்பற்று கிராமசபைத் தேர்தல்கள்

அக்கரைப்பற்று, செவ்.

நிந்தாவூர் தொகுதியிலுள்ள காரைதீவு, நிந்தாவூர், அக்கரைப்பற்றின் வடபகுதி, அக்கரைப்பற்று மத்திய பகுதி ஆகிய நான்கு கிராமசபைகளின் தேர்தல் முடிவடைந்துள்ளது. 33 வட்டாரங்களைக் கொண்ட பிரஸ்தாப கிராம சபையில் 9 வட்டாரங்களில் போட்டியின்றி உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒரு வட்டாரம் கல்லோயா அபிவிருத்திச்சபையின் அதிகார எல்லைக்குள் இருப்பதினால் தேர்தல் இல்லை. ஏனைய 25 வட்டாரங்களிலும் 64 பேர் போட்டியிட்டார்கள். அக்கரைப்பற்று வடபகுதி கிராமசபையின் 4-ம் வட்டாரத்தில் தமிழரசுக்கட்சியின் அபேட்சகராக திரு. இரா. பொன்னுத்துரை வெற்றி பெற்றுள்ளார். வெற்றி பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

### அக்கரைப்பற்று மத்திய கிராமசபை

1-ம் வட்டாரம்: கல்லோயா அபிவிருத்திச்சபையின் அதிகார எல்லைக்குள் இருப்பதால் தேர்தல் இல்லை. 2-ம் வட்டாரம்: திரு. இ. வி. வி. கணபதிப்பிள்ளை, 3-ம் வட்டாரம்: திரு. எஸ். கணபதிப்பிள்ளை, 4-ம் வட்டாரம்: திரு. ரி. கணபதிப்பிள்ளை, 5-ம் வட்டாரம்: திரு. கே. கே வேலுப்பிள்ளை, 6-ம் வட்டாரம்: ஜனாப் எம். முகமது அபுபக்கர் தங்கராசா, 7-ம் வட்டாரம்: ஜனாப் எம். எம். அபுபக்கர் (பழைய தலைவர்), 8-ம் வட்டாரம்: ஜனாப் எம். அச்சுமுகமது, 9-ம் வட்டாரம்: ஜனாப் ஏ. ஆர். எம். இப்ருகீம் (தற்போதைய தலைவர்), 10-ம் வட்டாரம்: ஜனாப் எம். எம். முஸ்தபா உடையார், 11-ம் வட்டாரம்: ஜனாப் எம். ஐ. ஏ. மௌலானா.

### வடபகுதி கிராமசபை

1-ம் வட்டாரம்: ஜனாப். ஐ. முகமதுக்காசிம், 2-ம் வட்டாரம்: ஜனாப் எம். மீராலெவ்வை, 3-ம் வட்டாரம்: ஜனாப் ஏ. பக்கீர்முகைதீன்பிச்சை, 4-ம் வட்டாரம்: திரு. இரா. பொன்னுத்துரை (தமிழரசுக் கட்சி உறுப்பினர்) 5-ம் வட்டாரம்: ஜனாப் ஏ. சின்னலெவ்வை (மாஜிததலைவர்), 6-ம் வட்டாரம்: ஜனாப் எம். உதுமாலெவ்வை (தற்போதையதலைவர்) 7-ம் வட்டாரம்: ஜனாப் ரி. சுலைமாலெவ்வைப் போடிதாருஷ், 8-ம் வட்டாரம்: ஜனாப் எம். ஏ. எம். சுலைமாலெவ்வை.

### நிந்தாவூர் கிராமசபை

இக்கிராமசபையின் எட்டு வட்டாரங்களிலும் போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

1 ம் வட்டாரம்: ஜனாப் எம். எம். முஸ்தபா (மாஜி நிதி மந்திரி), 2 ம் வட்டாரம்:

(6-ம் பக்கம் பார்க்க)

## இருவருக்கு கட்டாய ஓய்வு

கொழும்பு, செவ்வாய்

புகையிரதப் பகுதியிற் கடமையாற்றும் இரண்டு தமிழருக்குச் சிங்களத்தில் கடமையாற்றும் தகுதியற்றவர்கள் என்ற காரணத்திற்காக, கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நாவலப்பிட்டி புகையிரத நிலைய உதவி அதிபர் திரு. டி. ஜே. அந்தோனிப்பிள்ளை, அநுராதபுரம் தலைமைக்காட் திரு. எப். நல்லரத்தினம் ஆகிய இருவருக்குமே கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாம். இவர்கள இருவரோடும் கட்டாய ஓய்வ உத்தரவு வழங்கப்பட்ட தமிழரது எண்ணிக்கை ஐம்பதாகிறது.

## நீரில் மூழ்கி மரணம்

பளை, செவ்வாய்

பெரிய பளையைச் சேர்ந்த சின்னத்தம்பியின் 16 வயது மகன் தம்பகாமத்துப் பெரிய குழத்தில் நீந்திக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி மரணமானர். இவரது சடலம் மறுநாள்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

மரண விசாரணையின்போது நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கட்டாய ஓய்வு உத்தரவை எதிர்த்து வழக்குத்தாக்கலாகும்

கொழும்பு, செவ்வாய்

சிங்களத்தில் தேர்ச்சிபெருத காரணத்துக்காக அரசாங்க சேவையிலிருந்து கட்டாயமாக ஓய்வுபெறவேண்டுமென வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து விற்பனவு இலாகாவைச் சேர்ந்த திரு. எஸ். கங்காதரன் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யவிருக்கிறார். வழக்கு தாக்கல்செய்வதற்குரிய முன்னறிவித்தலை திறைசேரி உதவியதிகாரிக்கு அவர் கொடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

கட்டாய ஓய்வு உத்தரவால் பாதிக்கப்பட்ட மற்றொரு அரசாங்க ஊழியரான திரு. எல். தியாகராஜா என்பவரும் உத்தரவை எதிர்த்து வழக்கு தாக்கல்செய்யவிருக்கிறார்.

## காஷ்மீர் பிரச்னை மீண்டும் ஐ. நா. செல்லலாம்

நியூயோர்க், மே 19

காஷ்மீர் பிரச்னை மீண்டும் ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குச் செல்லலாமென்று பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி திரு. புட்டோ தெரிவித்துள்ளார்.

ஐ. நா. வில் நடைபெற்ற காஷ்மீர் விவாதத்துக்குத் தலைமை வகித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திரு. செய்டோ தமது முடிவுரையில்; காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இங்கு நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடையே ஒருமித்த கருத்து இல்லாததால் விவாதம் முடிவடைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் பிரச்னையை அன்பு வழியினுல் தான் தீர்க்கமுடியுமென்று இவ் விவாதத்தில் கலந்துகொண்ட ஐ. நா. பிரதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

என்னையே பக்திசெய்து சரணடைந்த ஒருவரை, பூமியிலுள்ள யாருமட்டுமல்லாமல் வேறெந்த சக்தியும்கூட வெல்ல முடியாது.

— ஸ்ரீமத்பாகவதத்தில் பகவான்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி 7 (20-5-64)


## கூட்டுறவு இயக்கங்கள்

யுத்தகாலத்தில் பலநாடுகளிலும் பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடியபோது இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றி அந்தநிலை இங்கு ஏற்படாமல் மக்களைப் பாதுகாத்தது. யுத்தம் முடிந்தபின்னரும் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கு நிலைபெற்று நாட்டின் பொதுவாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டன. என்றாலும் எந்த ஸ்தாபனத்திலும் புகுந்துகொள்ளும் ஊழல் கூட்டுறவு இயக்கத்திலும் இடம்பெற்றுவிட்டது. கூட்டுறவு இயக்கங்களில் இன்னமும் ஊழல்கள் மலிந்திருப்பதை உணவு, விவசாய, கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவே ஒரு பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒருசிலரை வெளியேற்றுவதன்மூலம் ஊழலை ஒழித்துக்கட்டமுடியாதெனவும் அவர் கூறுகிறார் இதில் உண்மையுண்டு. கூட்டுறவுச் சங்கங்களின் இலாபப் பணத்தை அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதன்மூலம் ஊழலைக் குறைக்கலாமென மந்திரி தெரிவித்துள்ளார். இந்த யோசனை வெற்றி அளிக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் லாபப் பணத்தை அங்கத்தவர்களுக்கு பிரித்துக்கொடுக்கும் ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில் கூட ஊழல்கள் இருக்கத்தான் செய்கின்றனவென்பது பகிரங்க இரகசியம்.

ஊழல் மலிவதற்கு மூலகாரணம் என்னவென்பதை முதலில் முற்றாக ஆராயவேண்டியது அவசியம். அதன்பின்னரே அவற்றை நீக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உணவுப்பொருள்களும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் இறக்குமதி செய்யும் உரிமை இப்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமே உண்டு. இந்த ஸ்தாபனம்தான் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவு மற்றும் பொருள்களை விநியோகம் செய்கிறது. கருவாடு முதல் ஜவுளிவரை பல பொருள்களுக்கும் தட்டுப்பாடு உள்ளபொழுது கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் எவ்வாறு சீராக விநியோகிக்கமுடியும். இதுதவிர கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைப் பற்றிப் பலரும் புகார் கூறிவருகின்றனர். இந்த ஸ்தாபனத்துக்கு வரும் பொருள்கள் கள்ளமார்க்கெட்டில் விற்கப்படுவதாகவும் பொதுமக்களுக்குக் கிடைப்பது கஷ்டமாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. பொருள்களை விநியோகிக்கும் தலைமை இடத்திலேயே ஊழல் இருப்பதாயின் இதர சங்கங்களில் அது இடம்பெறுவதில் ஆச்சரியமில்லை.

ஊழல்கள், மோசடிகளைக் கண்டுபிடிக்கவும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையெடுக்கவும் கூட்டுறவுப் பரிசோதகர்கள், உணவுப்பகுதிப் பரிசோதகர்கள் இருப்பினும் ஊழல்கள், மோசடிகள் இன்னும் மலிவதற்குக் காரணம் என்ன?

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன நடவடிக்கைகள் அது இயங்கும் முறை ஆகியவை பற்றியும் கூட்டுறவுச் சங்கங்கள், யூனியன்கள் பற்றியும் விரிவாக ஆராயவும் ஊழல்களுக்கு அடிப்படைக் காரணம் என்னவென்பது பற்றி ஆராயவும் இவற்றைத் தவிர்ப்பதற்கு வழிவகைகள் என்னவென்பது பற்றிப் பொதுமக்களின் கருத்தையும் அறிந்து சிபார்சு செய்யவும் தகுதியானதொரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவேண்டும். வியாதியை முற்றாக அறிந்தபின்னரே அதைக் குணப்படுத்தமுடியும். கூட்டுறவு இயக்கங்களுக்குள்ள ஊழல் வியாதியையும் அறிந்து அதன் பின்னரே அதைத் தீர்க்க எத்தனிக்கவேண்டும். உணவு விவசாய மந்திரி இதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

## விவசாய அமைச்சின் நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

விவசாயிகளிடமிருந்து ஏமாற்றிக் குறைந்த விலைக்கு நெல் வாங்கி, உத்தரவாதமுள்ள விலைத் திட்டப்படி அரசாங்கத்திற்கு விற்கும் ஒழுங்கற்ற வியாபாரிகள்மீது உடனடியாக ஒழுங்குநடவடிக்கை எடுப்பதற்குக் காணி, கூட்டுறவு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசாங்க நெல் சேமிப்பு நிலையங்களில் கூடுதலான நெல்லைச் சேமிப்பதன் மூலம் உடனடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கிச் சேமிக்கலாமென அமைச்சு கருதுகிறது.

## மீண்டும் பழைய சம்பவங்கள் நிகழும்

காலி, செவ்வாய்

மதம் ஒரு மயக்கம் தரும் பொருள் என்று கருதுவோரின் கையில் ஆட்சி ஒப்படைக்கப்படுமேயானால், போர்த்துக்கீசர் காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறுமென யு. என். பி. தலைவர்களில் ஒருவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன காலியில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பௌத்த மக்களை எச்சரித்தார்.

கடந்த பல வருடங்களாக மார்க்ஸீச வாதிகள் ஆட்சியை கைப்பற்றுவதற்காக பல வழிகளை கையாண்டார்களென்றும், அவர்களின் எண்ணம் மக்களின் வழக்குரிமைகளினால் நிறைவேறுதென்றும், அதனால்தான் கூட்டரசாங்கம் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற துடிதுடிக்கிறார்களென்றும், அவர் தொடர்ந்து பேசும்போது கூறினார்.

## விளக்கமறியலில் றிச்சாட்ஸ்

கொழும்பு, செவ்-

றிச்சார்ட் கிறிஸ்ரி பிரானின் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. பெட்டிராம் செனரத்தினிக்கு முன் ஆஜர் செய்யப்பட்டார். செல்வி லொறிற்றா என்ற இளம் மங்கையைச் சுட்டுக்கொன்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. மே மாதம் 27-ம் திகதி வரை இவரை விளக்க மறியலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## சடகோபராழ்வார் விழா

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இம்மாதம் 25-ந் திகதி ஸ்ரீ சடகோபராழ்வார் தினம் கொண்டாடப்படவிருக்கிறது. இம்மாதம் 23-ந் திகதி தொடக்கம் ஆலயத்தில் சடகோபரந்தாதி படிக்கப்படும். 25-ந் திகதி சடகோபராழ்வார் விழாவும் பஜனையும் நடைபெறுமென்று அறிவிக்கப்படுகிறது. இப்பொழுது தினமும் மாலையில் "ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்" படிப்பு நடைபெற்றுவருகிறது.

## ஊழல் இன்னும் ஒழியவில்லை

நாவலப்பிட்டி, செவ்.

"ஐக்கிய கூட்டுறவு இயக்கத்தில் இன்னும் ஊழல் இருந்து வருகிறது. தனிப்பட்ட ஒரு சிலரை வெளியேற்றுதன் மூலம் ஊழலை ஒழித்துவிட முடியாது" என்று கூட்டுறவு விவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஜினிகதோனவில் நடைபெற்ற ஐக்கிய கூட்டுறவு விழாவில் பேசும்போது கூறினார்.

ஐக்கிய கூட்டுறவு இயக்கத்திலிருந்து ஊழலை முற்றாக ஒழிக்க வேண்டுமானால் மக்களின் ஆதரவு அவசியமென்றும், கூட்டுறவு நிலையங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு இயக்க அங்கத்தவர்களுடன் மக்கள் தொடர்பு கொள்ளவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்.

# நாட்டிலும் நகரிலும்

அடுத்த வருடத்தில் இலங்கையில் சனத்தொகை 1 கோடியே 60 லட்சமாகிவிடுமென்று மந்திரி சி. பி. டி' சில்வா சென்ற வாரம் ஓரிடத்தில் கூறியிருக்கிறார். சனத்தொகை இப்படியே நாளிலும் பொழுதிலும் பெருகிக்கொண்டே போனால் எமது உணவுத் தேவைகளை எப்படி பூர்த்தி செய்து கொள்ளலாம் என்ற கவலை பிறக்கிறது. 1963-ம் வருடத்தில் 1,578,000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடியாகிற்று என்றும் இதில் விளைந்த நெல் 49,169,000 புசல் என்றும் மந்திரி சில்வா மேலும் கூறுகிறார். அதாவது ஏக்கருக்கு சராசரி 37·84 புசல் விளைவு காட்டியிருக்கிறது. அப்படியிருந்தும் சென்ற வருடத்தில் பிறநாடுகளிலிருந்தும் 396,684 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாம்.

ஒரு கொத்து நெல்லை அரிசியாக்கினால் அரைக் கொத்து அரிசி தேறும் என்று வைத்துக் கொள்ளலாம். குழந்தைகளையும் பெரியவர்களையும் சேர்த்து ஒரு ஜீவனுக்கு ஒரு நாளைக்கு அரைபடி அரிசி போதுமானதென்றும் வைத்துக்கொள்ளலாம். இந்தக் கணக்கின்படி பார்க்கப்போனால் அடுத்த வருடம் எல்லோரும் திருப்தியாக உண்பதற்கு 133,562,500 புசல் நெல்லை இங்கு விளைவிக்கவேண்டும். இது சாத்தியமாகுமா என்பது தான் கேள்வி.

நெல் சாகுபடி செய்யப்படும் நிலமும், மகசூலும் அடுத்த வருடத்தில் அதிகரிக்குமென்று வைத்துக் கொண்டு, ஏக்கருக்கு 40 புசல் நெல் விளைந்தாலும் 1963-ம் வருடத்தைய கணக்கின்படி 63,120,000 புசல் தான் விளையும். மீதிக்கு நாங்கள் வெளிநாடுகளையே எதிர்பார்க்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காடுகளை அழித்து அவற்றில் கமஞ்செய்வோரைக் குடியிருத்தி நெல் சாகுபடியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல வருடங்களாக முயற்சித்துவருகிறது. கல்லோயா போன்ற பிரமாண்டமான காணி அபிவிருத்தி திட்டங்களும் நடந்தேறிவருகின்றன. இருந்தும் சனத்தொகை உயர்வின் விகிதம் நெல் விளைச்சல் உயர்வின் விகிதத்தைக் காட்டிலும் கூடியதாக இருக்கிறது. மலேரியா ஒழிப்பு முதலிய சுகாதார அபிவிருத்தி திட்டங்களின் வெற்றியால் மரண விகிதம் குறைந்துவிட்டது- பிறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டது.

குடியேற்ற திட்டங்கள் எல்லாமே பூரணவெற்றி தருவதில்லை. உற்சாகத்தோடு கமஞ்செய்யப் புறப்படும் கமக்காரர் மழைக்குறைவு, நீர் பாய்ச்சும் வசதியின்மை, போக்குவரத்து கஷ்டம் முதலியவற்றால் மனமுடைந்து போய், இருந்த முதலையும் கொட்டி அழித்துவிட்டு, வீடு திரும்பிவிடுகிறார்கள். பரந்தன், கிளிநொச்சி, பதவியா, வவுனிக்குளம் முதலிய இடங்களில் நீர் பாய்ச்சக்கூடிய வசதி இருப்பதால் அங்குள்ள குடியேற்றத் திட்டங்கள் ஓரளவுக்கு வெற்றி கொடுக்கின்றன. இவ்விடங்களில் இரு போகமும் நெல் விளைகிறது. மற்ற இடங்களிலும் யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் மழை ஒன்றையே நம்பியிருக்கும் கமக்காரர் ஒரு போகம் தான் செய்யமுடிகிறது. கீழ் மாகாணப் பகுதிகளில் வெள்ளத்தினாலும் அடிக்கடி சேதம் உண்டாகிவிடுகிறது.

நெல்விளைவிக்கப்படும் நிலவிஸ்தீரணத்தை அதிகரிக்க முயலுவதிலும் பார்க்க ஏற்கனவேயுள்ள நெற்காணிகளின் விளைச்சலை அதிகரிக்க முயலுவது உசிதமென்று எமக்குப்படுகிறது. இலங்கையில் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 37 . 84 புசல் என்றாலும் மின்னேரியா போன்ற இடங்களில் 108 புசல் விளைகிறதென்றும் மந்திரியார் சுட்டிக்காட்டியிருக்கிறார். வட, கீழ் மாகாணங்களைப் பார்க்கிலும் குருநாக்கல், கேகாலை போன்ற இடங்களில் கூடிய நெல் விளைவதற்குக் காரணம் தண்ணீர் வசதி மட்டுமன்று, அங்குள்ளவர்கள் பழைய கமத்தொழில் முறைகளை விட்டுவிட்டு நவீன விஞ்ஞான முறைகளையும் கையாளுகிறார்கள். ஜப்பானிய முறைப்படி நெல் செய்யும் முயற்சியிலும் அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுள்ள பெரும்பகுதியிலும் நாற்று நடுதல், உரமிடுதல் போன்ற வேலைகள் ஊக்கமாக நடைபெறுவதில்லை. 'பரப்பும் பறையுமாக' விளைந்தாலே போதுமானதென்று சிலர் இருந்துவிடுவதுண்டு. யாழ்ப்பாணத்தில் மிகத் திறமான விளைவென்றாலும் ஏக்கருக்கு 60 புசலுக்கு மேல் தேறுவது கடினம்.

மின்னேரியில் ஏக்கருக்கு 108 புசல் விளைகிறதென்றால் ஜப்பானில் சில இடங்களில் 140, 150 ம் விளைகிறதாம். தாய்லாந்து போன்ற நாடுகள் தங்கள் சுயதேவையையும் பூர்த்தி செய்துகொள்ள இலங்கை முதலிய பிறநாடுகளுக்கும் அரிசி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இருப்பதன் இரகசியம் நெல் விளைச்சல் அதிகரிப்பேயாகும்.

—"வழிப்போக்கன்"

## ஜயாறன் எழுதுவது

காலையில் ஓர் அன்பர் வந்து 'டெயிலிநியூஸ் பேப்பரைப் பார்த்தீர்களா?' என்று கேட்டார். என்ன விஷயம் என்று விசாரித்ததில் "அரசாங்க உத்தியோகத்துக்கு தமிழ்மூலம் அதிகாரிகள் நியமிக்கப்படுவது அதிகரித்து வருவதாக மொழிக் கமிஷனர் கூறியிருக்கிறாராம். இது சுத்தஅபத்தம். சென்ற இரண்டு வருடகாலமாக கிளரிக்கல் பரீட்சை முடிவுகளைப் பார்த்தாலே இது விளங்கும். இனி சிங்களமூலம் மட்டுமே ஆட்களை நியமிக்க வேண்டுமென்பதைப்பற்றி ஒரு முடிவு கூறப்பட வேண்டுமென்று நீதிமந்திரி கேட்டிருக்கிறாராம். அப்படியாயின் அது சிங்களவரல்லாதவர்களுக்குப் பெரிய அநியாயமாகும்..." என்று உணர்ச்சியுடன் கூறினார்.

ஸ்தலஸ்தாபனங்கள், பிரதேசசபை இவைபற்றியமொழி விஷயமாகவும் பலபல செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி சிறப்பாக தமிழ்மக்களின் மனதைக் கலக்குகின்றது.

மொழிப் பிரச்னை மிகவும் சிக்கலானது. இதற்கு நல்ல தீர்வு காண இனி (கூட்டு அரசாங்கம்) முயற்சி செய்யுமென்றும் பிரதமமந்திரி சிலகூட்டங்களில் அறிவித்துள்ளார். ஆகவே அதற்கிடையே மொழிக் கமிஷனரோ அல்லது வேறு அதிகாரிகளோ இதைப் பற்றி விவாதிக்கவோ எவ்வித தீர்மானமும் செய்யவோ கூடாதென்று கண்டிப்பான உத்தரவை பிரதமர் பிறப்பிக்க வேண்டும். நீதிமன்ற மொழித் தீர்ப்பைக் கௌரவிக்கவும் இவ்வித உத்தரவு அவசியமாகும். இல்லாவிட்டால் தவிவளி போய் அது பெரிய திருகுவலியாகும். இப்படி விஷமம் செய்ய சிலர் ஆவலுடன் இப்போது காத்திருக்கிறார்கள்.

* * *

சில மாணவர்கள் வந்தார்கள். படிப்பு முடிந்து என்ன தொழில் செய்யப்போகிறீர்கள் என்று கேட்டேன். வியாபாரம், சிறியதொழில் என்றுதான் அனைவரும் கூறினர். அரசாங்க உத்தியோகமென்று ஒருவர்கூடச் சொல்லவில்லை. ஏன் என்று கேட்டதற்கு, தமிழருக்குத்தான் இனி அரசாங்க உத்தியோகம் கிடையாதாமே- என்று சொன்னார்கள்.

தமக்குச் சிறிது காணி இருப்பதாயும் அதில் வாழை, திராட்சை எல்லாம் பயிர் செய்யப் போவதாயும் அரசாங்க உத்தியோகத்தைவிட இதில் நல்ல ஆதாயமிருப்பதாயும் சுதந்தரமாகவும் சந்தோஷமாகவும் வாழலாமென்றும் சொன்னார் ஒரு வாலிபர். பலே பலே!

ஆனால் இதற்கு ஒரேஒரு தடை. கமம்செய்யும் வாலிபராயின் இக்காலப் பெண்கள் மதியாரென்றும், நல்ல சீதனமெல்லாம் கிடைக்காதென்றும் ஓரன்பர் கூறுகிறார். பெண்களும் இவ்விஷயமாக மனம் மாற வேண்டிய காலம் வந்துவிட்டது. இதேசமயம் சீதன ஆசையையும் வாலிபர்கள் விட்டுவிடுவது பலவிதங்களிலும் நன்மையாகுமல்லவா?

* * *

துஞ்சலுந்துஞ்சலிலாத
போழ்திலும்
நெஞ்சக லைந்து நினைமின்
நாள்தொறும்
வஞ்சம் அற்றடி வாழ்த்த
வந்தகூற்
றஞ்ச வுதைத்தன அஞ்
செழுத்துமே.

— திருஞானசம்பந்தர்

ஐக்கிய நாடுகள் சபை

# காஷ்மீர் விவாதம் உடன்பாடு எதுவுமின்றி முடிவடைந்தது

## நேரடி பேச்சுக்கள் மீண்டும் நடைபெறுமென்று சக்ளா அறிவிப்பு

நியுயோர்க், மே 19

ஐக்கியநாடுகள் பாதுகாப்புசபையில் நடைபெற்ற காஷ்மீர் பிரச்னை சம்பந்தமான விவாதம் எவ்வித உடன்பாடும் காணமல் ஒத்திவைக்கப்பட்டது. பாகிஸ்தானின் கோரிக்கைமீது நடைபெற்ற இவ்விவாதத்தில் பாகிஸ்தான் தரப்பில் வெளிவிவகாரமந்திரி திரு. புட்டோவும் இந்தியாவின் சார்பில் கல்விமந்திரி திரு. சக்ளாவும் கலந்து கொண்டனர். இந்தவிவாதத்திலேயே ஒரு தீர்வு காண்பதற்கு பலநாடுகள் முயற்சி செய்தபோழுதிலும் எந்தவித தீர்மானமும் இறுதியில் வெளியாகவில்லை. காஷ்மீர் விவாதத்தில் அமெரிக்கா, பிரிட்டன் பிரதிநிதிகள் இந்தியாவின் நிலையையே ஆதரித்ததென்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காஷ்மீர் பிரச்னைபற்றிய விவாதம் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் இரண்டு தடவைகள் நடைபெற்ற பின்னர் இன்றுகாலை முடிவடைந்தது. இந்த விவாதத்துக்கு பிரான்ஸைச் சேர்ந்த பிரதிநிதியொருவர் தலைமை வகித்திருந்தார்.

### புட்டோ அறிவிப்பு

பாதுகாப்புசபையில் காஷ்மீர்பற்றிய விவாதம் முடிவடைந்த பின்னர் பாகிஸ்தான் பிரதிநிதி திரு. புட்டோ நிருபர்களுக்கு பேட்டியளித்தார். "காஷ்மீர் மக்களின் பூரண ஆதரவைத் பெற்றிருக்கும் திரு. ஷேக் முகம்மது அப்துல்லாவை ஐ. நா. பாதுகாப்புசபைக்கு அழைக்க வேண்டுமென்று நாம் கோரினோம். ஆனல் தனது குற்றங்கள் அம்பலமாகிவிடுமென்று கருதிய இந்தியா இதற்கு இணங்க மறுத்துவிட்டது. இந்தியாவின் இச்செயல் கண்டிக்கக்கூடியது என்று திரு. புட்டோ தெரிவித்தார்.

"காஷ்மீர் பிரச்னையில் ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் தலையிட வேண்டுமென்று இன்னுமொரு கோரிக்கையை விடுத்திருந்தோம். இதற்கும் இந்தியா இணங்க மறுத்துவிட்டது. காஷ்மீர் பிரச்னையில் தீர்வு காண்பதை இந்தியா விரும்பவில்லை" என்றும் திரு. புட்டோ கூறினர்.

காஷ்மீர் பிரச்னை விரைவில் தீர்க்கப்படாவிட்டால் காஷ்மீர் மக்கள் பகிரங்மாக கிளர்ச்சி செய்யக்கூடிய கட்டம் உருவாகலாமென்றும் திரு. புட்டோ எச்சரிக்கை செய்தார்.

### சக்ளா கருத்து

இந்தியப் பிரதிநிதி திரு. சக்ளா நிருபர்களுக்கு அளித்த ஒருபேட்டியில் காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்புசபையைக் கூட்ட வேண்டிய அவசியமெதுவும் இப்பொழுது ஏற்படவில்லையென்று இந்தியா முன்னரே அறிவித்திருந்ததென்றும் இப்பொழுதுகூட இந்தியா இதையே கருதுகிறதென்றும் கூறினர்.

"காஷ்மீர் சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்புசபையில் எந்தவித முடிவும் ஏற்படாதபொழுதிலும் இதுகுறித்து இந்தியாவும் பாகிஸ்தானும்தொடர்ந்து பேச்சுகள் நடத்தும் என்றும் இரு நாடுகளின் நேரடியான பேச்சுவார்த்தை மூலமே காஷ்மீர் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காணலாமென்றும் கூறினர்.

"காஷ்மீர் பிரச்னை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளினலும் தீர்க்கப்படவேண்டிய தொன்ருகும். இந்தப் பிரச்னையில் வெளியார் தலையிடுவது வரவேற்கத்தக்க முடிவல்ல. காஷ்மீர் பிரச்னையில் ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் தலையிட வேண்டுமென்று பாகிஸ்தான் தெரிவித்த கருத்து எதிர்பார்த்ததொன்றல்ல" என்றும் திரு. புட்டோ கூறினர்.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே மீண்டும் பேச்சுக்கள் நடைபெறுமென்று கூறிய திரு. சக்ளா; காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே என்ற அடிப்படைக் கொள்கையுடன்தான் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுமென்று தெரிவித்தார்.

### பிரதிநிதிகள் அபிப்பிராயம்

காஷ்மீர் சம்பந்தமான ஐ. நா. பாதுகாப்புசபை விவாதத்தில் கலந்துகொண்ட மற்றைய நாட்டுப் பிரதிநிதிகள்; இந்தப் பிரச்னையை இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தனர். இந்த விவாதத்தின் இறுதி நேரத்தில் அங்கத்தவர்கள் எல்லோரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் சேர்ந்து இரகசிய பேச்சுக்களை நடத்தினர்கள். பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கொண்டுவர அவர்கள் முழுமுயற்சியெடுத்தனரென்று ஐ. நா. வட்டாரங்கள் கூறுகின்றன.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### பரிதாப மரணம்

தனது தந்தையின் கொடுமையால் மரணமடைந்த பரிதாப சம்பவம் காரைக்காலில் நடந்திருக்கிறது. தனக்குத் தெரியாமல் தனது 14 வயது மகன் கொஞ்ச நெல்லை எடுத்து விற்றுவிட்டதால் கோபங்கொண்ட பையனின் தந்தை குப்புசாமி அவன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொதிக்கும் வெயிலில் சில மணி நேரங்களுக்குக் கிடத்தியதனல் பையன் பலியானன்.

### 'சினிமாக் காதல்' தற்கொலை

சீர்காழிக்குப் பக்கத்தூரான உமையாள்பதியில் 25 வயதான சாரதா என்ற தன் மனைவியை கலியபெருமாள் என்பவர் 'சினிமாவுக்குப் போகாதே, ஆண்களுடன் பேசாதே' என்று கண்டித்ததற்காக வருத்தமுற்று விஷம் அருந்தி மரணமடைந்தார். இவர் அடிக்கடி சினிமா பார்ப்பவர் என்பதும், கணவன் சினிமாவுக்குப் போகவேண்டாம் என்று கண்டித்ததால், தான் இனி சினிமா பார்க்க முடியாது என்ற கவலையினல் மனமுடைந்து தற்கொலை செய்திருக்கிருர் என்று தெரியவருகிறது.

### புதிய விமானப்பாதை

சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானங்கள் இறங்குவதற்கான மூன்ருவது புதிய பாதை ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை மத்திய அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. பிரதான பாதை தடைப்பட்டிருக்கும் சமயங்களில் காரவெல், போயிங் ஜெட் விமானங்கள் இறங்க இப்பாதை உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசாரிப் பிரிவினர் பஸ்கட்டண உயர்வை எதிர்த்து சென்னையில் ஊர்வலம் நடத்தினர். சுமார் 500 பேர் அளவில் கலந்துகொண்ட இவ்வூர்வலத்திற்கு ஸ்ரீ சங்கரய்யா, ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் தலைமைவகித்தார்கள். இறுதியில் பொதுக் கூட்டம் நடத்தினர்.

ஜார்ஸ் சமவெளியில்

## சகல நடு நிலைமை தளங்களும் பதட்லாவோ வசமானது

ஜார்ஸ்சமவெளி, மே 19

ஜார்ஸ் சமவெளியிலுள்ள சகல நடுநிலைமைத் தளங்களையும் கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்பினர் தம்வசமாக்கிக் கொண்டுள்ளனர். இவர்களுக்குப் பக்கபலமாக வடக்கு வியட்னும் துருப்புகள் ஆதரவளித்துள்ளன. லாவோஸில் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதென்று வியண்டைனிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

நேற்று நடைபெற்ற கடுமையான சண்டைகளைத் தொடர்ந்து ஜார்ஸ் சமவெளியின் தென் மேற்குப் பகுதியிலுள்ள ஜெனரல் கொங்லீயின் தளம் பதட்லாவோ வசமானது. நடுநிலைமைப் படைத்தளபதி ஜெனரல் கொங்லீ வேறு ஒரு பகுதிக்குத் தப்பியோடி தளமொன்றை அமைத்துக் கொண்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வியண்டைனில் நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா தெரிவிக்கையில், லாவோஸ் சம்பந்தமான ஜெனிவா உடன்படிக்கையை பதட்லாவோ படைகள் வேண்டுமென்றே மீறியுள்ளன என்று குற்றம் சுமத்தினர்.

இதற்கிடையில் லாவோஸ் நிலைமை குறித்து பிரிட்டனும் ரஷ்யாவும் துரிதமாக ஆராய்ந்து வருகிறதென்று பிரிட்டனிலிருந்து வெளியானசெய்தி ஒன்று கூறுகிறது.

## "இந்திய-பாக். யுத்தத்தை நினைத்துப்பார்க்கவும்முடியாது"

### காஷ்மீர் பிரச்னை குறித்து பிரதமர் நேரு கருத்து

வாஷிங்டன், மே 19

கம்யூனிஸ்ட் சீனவுக்கு மேற்கு நாடுகள் போர் சாதனங்கள் அனுப்புவதை தாம் எதிர்ப்பதாக இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

அமெரிக்க டெலிவிஷனுக்கு பிரதமர் நேரு பேட்டியளித்துள்ளார். இந்தப் பேட்டியின் போதுதான் அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். தமது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

மேற்கத்திய நாடுகள் சீனவுடன் வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்துவதையும் நான் ஆதரிக்கவில்லை. இதனல் சீன மக்கள் பட்டினியால் சாக வேண்டுமென்று நான் கூறவில்லை. சீனவுக்கான பொருளாதார உதவிகளை மேற்கு நாடுகள் நிறுத்தினல் ஒருவேளை சீன, உணவு உற்பத்தி துறையில் தனது கவனத்தைத் திருப்பலாம் என்று நான கருதுகின்றேன்.

சீனவுடன் ஏற்படும் மற்றுமொரு தாக்குதலை சமாளிக்க இந்தியா இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கின்றது. இதற்கான குறிக்கோளை இந்தியா வெகு விரைவில் அடைந்துவிடும்.

அணுசக்தித்துறையில் ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் சீனவை இந்தியா தோற்கடித்துவிடும். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் இந்தியா ஒருபொழுதும் இறங்காது. இறங்கவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஆனல் சீனவைப் பொறுத்தமட்டில் அணு ஆயுதங்களை அது உற்பத்தி செய்வதற்கு அதிக காலம் எடுக்கலாம்.

காஷ்மீர் பிரச்னையைப் பொறுத்தமட்டில்; இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூளலாம் என்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாதது. காஷ்மீர் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை என்று பாகிஸ்தான் நினைக்கிறது. ஆனல் இப்பிரச்னை எவ்வளவோ காலத்துக்கு முன்னதாகவே தீர்ந்துவிட்டதென்று இந்தியா முடிவு செய்துள்ளது. காஷ்மீர் பிரச்னையை வேண்டுமென்றே கிளப்பும் பாகிஸ்தான், இப்பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை கொண்டிருந்தால், சட்டவிரோதமாக அது வைத்திருக்கும் காஷ்மீரின் ஒரு பகுதியை கம்யூனிஸ்ட் சீனவுக்கு விட்டுக்கொடுத்திருக்க முடியாது.

உத்தேச இரண்டாவது பாண்டுங் மகாநாடு, முதலாவது பாண்டுர் மகாநாட்டைப் போன்று நல்ல பலனைக் கொடுக்காது. இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளிடையே கருத்து வேறுபாடுகள்; இரண்டாவது மகாநாட்டை வெற்றி பெறச் செய்யாதென்றே நான் கருதுகின்றேன்.

அஜாத்காஷ்மீரில்

## இந்திய துருப்புகள் சுட்டதில் 4 பாக். துருப்புகள்மாண்டனர்

### பாக். வானெலி குற்றச்சாட்டு

ராவல்பிண்டி, மே 19

அஜாத் காஷ்மீரில் பாகிஸ்தான் துருப்புகள்மீது இந்தியத் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனரென்றும் இதில் 4 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டு மூவர் காயமடைந்தனர் என்றும் பாகிஸ்தான் வானெலி அறிவித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் காஷ்மீர் சம்பந்தமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், இந்தியா நடத்திய இந்தச் செயல் பாரதூரமான நடவடிக்கையென்று பாகிஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளது.

அஜாத் காஷ்மீரில் உள்ள ஒரு கிராமத்தில் போர்நிறுத்தக் கோட்டையும் தாண்டி இந்தியத் துருப்புகள் பாக். துருப்புகளைத் தாக்கினரென்று பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது. இதுசம்பந்தமாக ஐ. நா. பார்வையாளர்களிடம் பாகிஸ்தான் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

## நேருவின் கருத்துக்கு ஷேக் அப்துல்லா வரவேற்பு

### 24-ம் திகதி பாகிஸ்தான் செல்வார்

ஸ்ரீநகர், மே 19

பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காஷ்மீர் பிரச்னை குறித்து பிரதமர் நேரு வெளியிட்ட கருத்துக்களை திரு. ஷேக் அப்துல்லா வரவேற்றுள்ளார்.

திரு. ஷேக் அப்துல்லா நேற்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், இப்போதுள்ள சூழ்நிலையில், காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இதைவிட வேறு எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்க முடியாது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசியிருப்பது முற்றிலும் வரவேற்கத்தக்கதொன்ருகும் என்று கூறினர். (4-ம் பக்கம் பார்க்க)

## பேசும் மீன்

லண்டன், மே 18

ஆஸ்திரேலியாவிலுள்ள பிரிஸ் பேருக்கு அருகிலிருக்கும் மோரிடன் வளைகுடாவில் அமைதியான கடலில் வாழும் பேசும் மீன் ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

இரும்புக் கவசம் போட்டது போன்ற அம் மீனுக்கு இரண்டு கொம்புகளும், இரு பெரிய கண்களும் இருந்தன.

வரலாற்றுக் காலத்துக்கு முந்தியதாகத் தோன்றும் அம மீனைக் 'கடற் குருவி' என்று சொல்கிருர்கள். அம் மீன் பெட்டைக் கோழி போல் கத்தும், பேசும் என்று அறியப்பட்டுள்ளது.

# "சிங்களம் போதனு மொழியானுல் முஸ்லிம்கலாசாரம் அழிந்துவிடும்!"

## பண்டாரவளை முஸ்லிம் மகாநாடு மகஜர்

பண்டாரவளை, செவ்.

"சிங்கள மொழியிற் கல்வி போதிக்கவல்ல முஸ்லிம் ஆசிரியர்கள் வெகு சிலரேயாகையால் சிங்களம் முஸ்லிம்களின் போதனு மொழியாக்கப்பட்டால் அதிகமான சிங்கள ஆசிரியர்களை முஸ்லிம் கல்வி நிலையங்களுக்கு நியமனம் செய்யும்படி நேரும். சிங்கள மாணவர்களுக்கும் முஸ்லிம் கல்வி நிலையங்களில் இடம் தரவேண்டிய இன்றியமையாமை ஏற்படும். காலகதியில் முஸ்லிம் கல்வி நிலையங்களில் பயிலும் முஸ்லிம் அல்லாதவரின் தொகை அதிகப்படும். இதைத் தொடர்ந்து முஸ்லிம் தலைமை ஆசிரியர்கள் உதவியாசிரியர்களின் இடங்கள் சிங்களத் தலைமையாசிரியர்கள், உதவியாசிரியர்களுக்கு வழங்கப்படும் நிலை ஏற்படும். முடிவில் முஸ்லிம் வித்தியாலயங்கள் அனைத்தும் இஸ்லாமிய சமயத்துக்கும் கலாச்சாரத்துக்கும் புறம்பானவற்றை வளர்க்கும் பௌத்த கல்விக்கூடங்களாக மாறிவிடும்" என்று பண்டாரவளை முஸ்லிம் கல்வி மகாநாட்டினுல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் சுட்டிக் காட்டியபடி நடக்கும் என்பதற்கு உதாரணமாக கண்டி முஸ்லிம் பெண்கள் கல்லூரியையும், கம்பளை சாகிராக் கல்லூரியையும், பண்டாரவளை முஸலிம் கல்வி மகாநாடு உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

கண்டி முஸலிம் பெண்கள் கல்லூரியில் சிங்களம் போதனு மொழியாக்கப்பட்டதன் பின் அதிபரும் பெரும்பான்மையான உதவியாசிரியர்களும் சிங்களவராகவே உள்ளனர் என்றும், கம்பளை சாகிராக் கல்லூரியிலும் இந்த நிலைமை உருவாகி வருவதை அவதானித்த முஸ்லிம பெற்ருேர் அதை எதிர்த்துப் போராடி வருகின்றனர் என்றும் அந்த மகஜரில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பின்வரும் மூன்று வேண்டுகோள்களையும் பண்டாரவளை கல்வி மகாநாடு கல்விப் பகுதிக்கு விடுத்துள்ளது.

1. இஸ்லாமிய மதமும் இஸ்லாமிய நாகரிகமும் க. பொ. த. உயர்தர வகுப்புக்குப் பாடங்களாக அமைக்கப்படவேண்டும்.

2. முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம் ஆசிரியர்களே நியமிக்கப்படவேண்டும்.

3. சிம்மாசனப்பிரசங்கத்தில் குறித்துள்ளபடி முஸ்லிம்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்.

---

## திருக்குறள் மணித்தேர்வு

கொழும்பு, திங்கள்

தமிழ்மறைக் கழகம் நடத்தும் திருக்குறள் மணித்தேர்வு 1965-ம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் ஜூன் திங்கள் மூன்ரும் சனிக்கிழமை நடைபெறும். யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, மதுரை, திருச்சினுப்பள்ளி, சென்னை, கோலாலம்பூர், சிங்கப்பூர், ரங்கூன் முதலிய நகரங்களில் நடைபெறும். இத் தேர்வு மூன்று பகுதிகளை உடையது.

## 'கூட்டரசாங்கம் வெற்றியளிக்கும்'

யக்கலை, செவ்வாய்

விரைவில் நிறுவப்படவிருக்கும் கூட்டு அரசாங்கம், முழு வெற்றியையும் அளிக்கும் என்று சுதந்திரக்கட்சி எம். பி. யான திரு. ஆர். எல். பெரேரா வத்துகமவில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசும்போது கூறினுர்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கூட்டு அரசாங்கம் அதிக பயனளிக்குமென்றும், கூட்டு அரசாங்கம் இந்த நாட்டின் சரித்திரத்தில் ஒரு புதிய பாதையை அமைக்கக்கூடியதாக இருக்குமென்றும் அவர் மேலும் பேசும்போது கூறினுர்.

---

## மேயருக்கு தொழிற் சங்கம் மகஜர்

குருநகர், புதன்

கைத்தொழிற் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் நிருவாகசபைக் கூட்டம் சமீபத்தில் சங்கத்தலைவர் திரு. அ. சூசை தலைமையில் நடைபெற்றது. பின்வரும் சில தீர்மானங்களை மேயரிடம் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானங்கள் பின்வருமாறு: 55 வயதில் ஓய்வுபெறும்படி தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் உத்தரவு 12 மாத முன்னறிவித்தலுடன் கொடுக்கப்பட்டு 55 வயது பூர்த்தியின்பின் அமுலாக்கப்படவேண்டும்.

ஓய்வுபெற்றவர்களுக்குபென்சன் பணம் முழுத்தொகையும் கொடுக்கப்படவேண்டும்.

ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் இடங்களுக்கு தற்காலிகமாக வேலைசெய்த தொழிலாளர்களை நியமித்து அவர்கள் நியமனத்தைநிரந்தரமாக்க வேண்டும்.

---

## "கணவரும் இதனையே செய்திருப்பார்"

கொழும்பு, செவ்வாய்

"தற்பொழுதுள்ள நிலைமையில் சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பத்திரிகைகளும், மற்றும் சிலரும் கண்டனம் தெரிவிக்கின்றனர். ஆனுல் காலமான எனது கணவர் உயிருடன் இருந்திருந்தால் இதேமாதிரித்தான் நடவடிக்கை எடுத்திருப்பாரென்பதில் எனக்குச் சந்தேகமில்லை" என்று பின்வத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா கூறினுர்.

---

## ஐ. அ. கு. வுக்கு ரஷ்ய ஆயுதம்

கெய்ரோ, மே 19

ஐக்கிய அரபுக் குடியரசு தனது பாதுகாப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் படைஆயுதங்களை ரஷ்யா வழங்குமென்று சோவியத் பிரதமர் குருஷ்சேவ் இங்கு அறிவித்துள்ளார். புரட்சிகளைச் சமாளிக்க ஆயுதங்கள் தேவை என்றும் குருஷ்சேவ் குறிப்பிட்டுள்ளார்.

---

## நேருவின் கருத்துக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஷேக் அப்துல்லா நாளை புதன்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமர் நேருவை மீண்டும் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார். திரு. ஷேக் அப்துல்லா புதுடில்லிக்கு ஒருநாள் முன்னதாகவே செல்கின்ருர்.

இம்மாதம் 24-ம் திகதி திரு. ஷேக் அப்துல்லா பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வார் என்று ராவல்பிண்டியிலிருந்து வெளியான செய்தியொன்று கூறுகின்றது. இம்மாதம் 25-ம் திகதி திரு. ஷேக் அப்துல்லா பாகிஸ்தான் அதிபருடன் பேச்சு நடத்துவார்.

## மைத்திரிபாலா வேண்டுகோள்

அநுராதபுரம், செவ்வாய்

"1956-ம் ஆண்டிலிருந்து ஆசிரியர்களாகநியமனம்பெற்ற ஆசியர்கள் அனைவரும் அவரவர்கள் எங்கு கடமையாற்றினும் உடனடியாக அநுராதபுர மாவட்டத்தில் கடமையாற்றும்படி பணிக்கப்படுவார்கள். இக்கட்டளையை மீறுபவர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவர்" என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா மாணவ ஆசிரியர் பயிற்சி வகுப்பை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தனது சொந்த இடமென்ற ஹோதாவில் பெற்ருேர் தமது பிள்ளைகளை அங்கு கல்வி பயிற்றப் போதிய உயர்தரக் கல்லூரிகள் இல்லாதது குறித்துக் கவலைகொண்டிருப்பதை அறிவாரென்றும் தாமே வெளியிற் சென்றுதான் உயர்தரக் கல்வி பெற்ருரென்றும், தமது பெற்ருேரைப் போல வசதி படைத்திராத பல பெற்ருேர் தமது பிள்ளைகளைக் கற்பிக்க முடியாமல் திணறுவதாகவும் அநுராதபுரத்திலுள்ள பல பாடசாலைகளைத் தர உயர்வு செய்வதன் மூலம் இந்தக் குறையை நிவிர்த்திசெய்யத் தான் முயல்வதாயும் அவர் கூறினுர்.

மாணவ - ஆசிரியர் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்தத் திட்டம் நிறைவேறுமாவெனத் தாம் முதலில் ஐயுற்றதாகவும் இப்போது புதிதாக நியமனமான மாணவ ஆசிரியர் கடமையாற்றத் தொடங்குமுன் தேவையான பயிற்சி பெறுவதைப் பார்க்கத் தமக்குப் பூரண திருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

---

## ராக்கெட் வெடித்து மூவர் மரணம்

வாஷிங்டன், மே 19

நேற்று இங்குள்ள ஒரு ராக்கெட் தளத்தில் ராக்கெட் ஒன்று வெடித்ததில் மூவர் மாண்டனர்.

## "கூட்டுச் சேருவதினுல் சுதந்திரம் பறிபோகும்"

தெரணியகலை, செவ்வாய்

"கூட்டரசாங்கம் நிறுவும் முயற்சி வெற்றியளிக்குமானுல் மிகவும் கஷ்டப்பட்டுப் பெற்ற சுதந்திரம் பறிபோய்விடும். பிரதமர் இதனை மனதிற்கொண்டு இடதுசாரியினருடன் கூட்டுச்சேரும் எண்ணத்தைக் கைவிடவேண்டும்" என்று இதன்கொடவில் நடைபெற்ற யு. என். பி. பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கூறினுர்.

மார்க்ஸிசவாதிகள் சுதந்திரத்தை விரும்புகிறவர்களல்லவென்றும், அவர்களுடைய முழு நோக்கமும், நாட்டில் குழப்பமான நிலையை உருவாக்கி கலபமாக ஆட்சியைக் கைப்பற்றுவதுதானென்றும் அவர் தொடர்ந்து பேசும்போது கூறினுர்.

---

## சேனையில் இறந்து கிடந்தனர்

பையாகலை, செவ்வாய்

சேனைக்குக் காவலிருக்கச் சென்ற 35 வயது நபர் ஒருவரும் 15 வயதுச் சிறுவன் ஒருவனும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நிலத்தில் குப்புற இறந்து கிடக்கக் காணப்பட்டனர். இவர்களின் மரணம் பற்றி களுத்துறை உதவி மாஜிஸ்திரேட் எம். சண்முகம் மரணவிசாரணை நடத்தினுர். பதுரெலியாப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கே. ஏ. ராலிஸ், சோமசிறி ஆகியோரே இறந்தவர்களாவர்.

---

## தெ. வியட்னுமுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், மே 19

தென் வியட்னுமுக்கான பாதுகாப்பு உதவிகளில் மேலதிகமாக 12 கோடியே 50 லட்சம் டலர்களை அதிகரிக்கும்படி அமெரிக்க பார்லிமெண்டை அதிபர் ஜோன்ஸன் கேட்டுள்ளார்.




GC/103



ப்ரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'ப்ரீடம்' மார்க் கற்பூரம்.
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்,
ப்ரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 20-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

மாலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-10 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியநற்சிந்தனை.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சுதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — 'எங்கள் முறை' — டி. குணரத்தினம், 7-30 கே. பாக்கியராஜா — வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-16 எம். வர்ணகுலசிங்கம் — பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு. 7-00 துதிப் பாடல்கள், 7-30 இசைக் கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 பாபவிநாச முதலியார் — பாடல்கள்.

மாலை 5-15 கே. எஸ். நாராயணன் — வீணை, 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-45 சாட்சியம் — நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-30 புல்லாங்குழல், 8-45 குரல்இசை, 9-45 இசைமாலை, 10-00 கே எஸ். நாராயணன் — வீணை

## கோப்பாயில் சுகாதாரவாரம்

கோப்பாய், புதன்

கோப்பாய், நல்லூர், நீர்வேலி, கொககுவில், புத்தூர், கோண்டாவில், அச்சுவேலி ஆகிய கிராமசபைகளின் ஆதரவோடு கோப்பாயில் ஜூன் மாதம் 8ந் தேதிமுதல் 14ந் தேதிவரை "சுகாதாரவாரம்" கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதற்கான செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

சுகாதாரம், கிருஷிகம் சம்பந்தமான பொருட்காட்சி ஒன்றைக் கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சுகாதாரவாரத்தையொட்டி நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம் சுகாதாரவார கொண்டாட்டத்தின்போது தினமும் பாடசாலைச் சிறுவர் சிறுமியரின் ஊர்வலங்கள் நிகழ்த்தப்படுமென்றும் 60 பாடசாலைகளின் ஆசிரியர்கள் சுகாதாரம் சம்பந்தமாகக் கலந்துரையாடுவரென்றும் சுகாதார அறிவியல் நிபுணர்களின் சொற்பொழிவுகள் இடம் பெறுமென்றும் இசை, நடன நிகழ்ச்சிகளுக்கும் நிகழ்ச்சி நிரலில் இடமுண்டெனறும் செய்தியொன்று கூறுகிறது.

## தாச்சிப் போட்டி

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் விளையாட்டுக்கழகத்துக்கும், கட்டுடை விளையாட்டுக் கழகத்துக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற தாச்சிப் போட்டியில் சுழிபுரம் விளையாட்டுக் கழகத்தினர் ஐந்து பழம் எடுத்து வெற்றி பெற்றனர். போட்டி கட்டுடை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டி முடிவின்படி சுழிபுரம் கோஷ்டி ஆறு பழம் ... கட்டுடைக் கோஷ்டி ஒ... பழத்தையும் எடுத்தன.

## ORDER NISI

In the District Court of Jaffna
In the matter of the Last wi and Testament of the late Nallathamby Kathirvelu of Chulipuram
Deceased

Case No. T/ 1411.
Pakkiam widow of Nallathmby Kathiravelu of Chulipuram.
Petitioner.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram Esqr. District Judge Jaffna on the 10th day of February 1964 in the prrsence of Mr. T. Sangarapilli, Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner and affidavi of one of the witnesses to the Last Will having been read.

It is ordered that petitioner be declared entitled to have Probate of the Last Will and Testament of the deceased as sole legatee and as executor in terms of the Last Will dated 26th August 1937 and attested by R. Candiah N. P. under No. 9447 and the said will be declared proved and Probate there of be issued to the Petitioner accordingly, unless any person or persons interested shall on or before the 24th day of April 1964 appear before this Court and show cause to the statisfaction of this Court to the contrary.

Jaffna, this 10th day of February 1964.

Sgd. N. Sivagnasundram,
District Judge, Jaffna.
15-5-64.

Drawn by,
Sgd. T. Sangrapillai,
Proctor for Petitioner,

24-4-64.
Time to show cause extended to 5th June 964.

Sgd. N. Sivagnanasundram,
District Judge,
15-5-64. 369

## தேவை

வலிமேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆரம்பித்திருக்கும் கல்லுண்டாய் உப்பள அபிவிருத்தித் திட்டத்தில் வேலை செய்வதற்குக் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 25-5-64 திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு முன்னதாக சமாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலையைக் குறிப்பிடவும். நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவோர், ஆறு மாத காலம் தற்காலிகமாக நியமிக்கப்படுவர்.

1. பண்டசாலைப் பொறுப்பாளராகவும், கணக்காளராகவும் கடமையாற்ற ஒருவர் தேவை.

தகுதி:- (அ) ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியிருத்தல், (ஆ) ஆங்கிலத் தட்டெழுத்து அனுபவம். (இ) கணக்கு வைக்கும் அனுபவம், வயது:- 22-க்கு மேல் 40-க்கு உள். பிணைப்பணம்:- காசு ரூபா 2500-00. வேதனம்:- மாதம் 250 ரூபா மட்டும்.

2. கடல் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்குபவர் ஒருவர் தேவை,

தகுதி:- (அ) குறைந்தது ஜே. எஸ். ஸி. சித்தியெய்தியிருத்தல். (ஆ) பம்பு வேலை அனுபவம் உடையவர்,

வயது:- 22—40. பிணைப்பணம்:- காசு ரூபா 1000-00. வேதனம்:- மாதம் 150-00ரூபா மட்டும்.

3. உப்பளக் காவலாளர் மூவர் தேவை,

தகுதி:- குறைந்தது ஜே. எஸ். ஸி. வயது:- 20—40. பிணைப்பணம்:- காசு ரூபா 500-00. வேதனம்:- மாதம் 135-00 ரூபா மட்டும்.

4 பியோன் ஒருவர்தேவை.

தகுதி:- குறைந்தது ஜே. எஸ். ஸி. வயது:- 20—40. பிணைப்பணம்:- காசு ரூபா 500-00 வேதனம்:- மாதம் ரூபா 135-00 மட்டும்.

5. தேவைக்கேற்ப உப்பளத்தில் வேலைசெய்வதற்குக் கூலியாட்கள் முறைப்படி எடுக்கப்படும். விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

வேலை நேரம்:- காலை 6-30ல் இருந்து 10-30 வரை. மு. ப. 11-ல் இருந்து பி. ப. 1-00 மணி வரை.

நாட்கூலி.- ரூபா 4-50 சதம் மட்டும்.

இப்படிக்கு,
வி. கந்தசாமி,
(சமாச நிருவாகச்செயலாளன்)
16-5-64
சங்கானை. 366

## வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கல்லுண்டாய் உப்பள அபிவிருத்தித் திட்டம்

### தேவை

### 1000 கியூப் 9—12 கண்டகல் தேவை

கல்லுண்டாய் உப்பளத் திட்டத்தின் உபயோகத்திற்கு 1000 கியூப் 9—12 கண்டகல் தேவை. இத்தொகை 1-6-64ல் இருந்து 31-7-64 க்கு முன்னதாக கல்லுண்டாயில் குறித்த இடத்தில் கியூப் கட்டிக் கொடுக்கவேண்டும்.

10 கியூப் ஈவு இன்றி இறக்கமாக முறைப்படி கட்டப்பட்டு தார் இடப்பட்டு, உப்பளமுகாமையாளரிடம் பொறுப்புக் கொடுத்ததும் பெறுமதியின் 75% உடன் கொடுக்கப்படும். ஒப்பந்தப்படி செய்ய விரும்புவோர் ஒப்பந்தம் செய்யும் பொழுது ரூபா 100-00 சமாசத்தில் (டிப்போசிற்) வைப்புப் பணம் செலுத்தவேண்டும். ஒப்பந்த மூலம் செய்யவிரும்புவோர் வலிமேற்கு ப. நோ. கூ. ச. சமாசத் தலைவருக்கு 31-5-64 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவேண்டும்.

இப்படிக்கு,
வி. கந்தசாமி,
சமாச நிருவாகச் செயலாளர்,
16-5-64
சங்கானை. 36




ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு மிக சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ் கார்டீனியா
நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

## 10 துருக்கியர் கைது

நிக்கோஸியா, மே 19

நிக்கோஸியாவில் வந்திறங்கிய 10 துருக்கிய பிரயாணிகளைச் சைப்பிரஸ் பொலிசார் கைதுசெய்துள்ளதை துருக்கி வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்தப் பிரயாணிகளில் 32 பேரைக் காணவில்லையென்றும் துருக்கி குற்றம் சுமத்தியுள்ளது.

தனது பலத்தை அதிகரிக்கும்பொருட்டு வெளிநாடுகளிடமிருந்து சக்திவாய்ந்த விமானங்களையும், குண்டுகளையும் சைப்பிரஸ் பெறுமென்று இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS,Chunnakam. 273

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

"மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு" என்று கூப்பாடு போடுங் காலத்திலே சிறந்த உள்நாட்டுத் தயாரிப்புக்களை உங்களுக்கு குறைந்தவிலையில் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 290

### காணவில்லை

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பள்ளிவாசல் ஒழுங்கையால் (Mosque Lane) பெரியகடை ரோட்டால் பஸ் நிலையத்திற்கு செல்லும் வழியில் நாலு (இல: R 065410, R 065411, R065519, R 065520) கூப்பன்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்கீழ்க்காணும் விலாசத்திற்கு சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும். எஸ். எம். கந்தசாமி, 106, திலகம் ரெயிலறிங்மாட், யாழ்ப்பாணம். 424

### யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டதாரி மாணவர் பகுதி

போதனவருடம் 1964-1965

கலைத்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் "உயர்நிலை" இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளுக்கும், கலை, விஞ்ஞானம், பொருளியல் ஆகிய துறைகளில் இலங்கை லண்டன் பல்கலைக்கழகங்கள் நடத்தும் தேர்வுக்குரிய வகுப்புகளுக்கும் புதிய மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

விண்ணப்பத் தாள்களும் ஏனைய விபரங்களடங்கிய குறிப்புகளும் கல்லூரி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அங்ஙனம் பெறவிரும்புவோர் தமது பெயரும் விலாசமும் எழுதப்பட்டதும் தபால் தலை ஒட்டப்பட்டதுமான நீண்ட காகித உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மே மாதம் 30-ந் திகதிக்குள் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

பதிவாளர்,
வட்டுக்கோட்டை. 292

# கூட்டு அரசாங்கம் ஏற்படுவது நிச்சயம்?

## எதிர்ப்பவர்களை சரிப்படுத்த புதிய வழிகள் கையாளப்படும்

யாழ்ப்பாணம் செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குமிடையில் 'கூட்டாட்சி' நிச்சயமாக ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகிறதெனவும் அடுத்த வார இறுதிக்குள் புதிய மந்திரிசபை அமைக்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

கூட்டாட்சி மந்திரிசபையில் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு இடமளிக்கக்கூடாதென்றகட்சி வலுவுடையுமானல், மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியிலுள்ளவரும் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் மந்திரி சபையில் அங்கம் வகித்தவருமான திரு. பி. ஏச். வில்லியம் சில்வாவுக்கு செனேட்சபையில் நியமனம்கொடுத்து மந்திரி சபையிலுமிடங்கொடுத்து நிலைமையைச் சீர்படுத்தலாமெனத் தெரிகிறது. கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளவர்களுக்கு மந்திரி சபையில் இடமளித்தால் மத்திய வழியில் இலங்கை அரசாங்கம் செல்வதென்ற வகையில் உதவி கொடுத்துவரும் மக்கள் சீனு அவ்வுதவியை நிறுத்தலாமென்ற பயம் ஒருபுறமும் சீனுவுக்கும் இலங்கைக்கும் உள்ள நல்லெண்ணத்திற்கும் உறவுக்கும் பங்கமேற்படக்கூடியதாயிருக்குமென்பது பற்றியும் பிரதமர் சிறிமா உணர்த்தப்பட்டுள்ளாரென்றும் அறியப்படுகிறது. இந்நிலையைத் தவிர்க்க கம்யூனிஸ்ட்கட்சி ஆயத்தமாகவுள்ளதென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அடுத்ததாக லங்கா சமசமாஜக் கட்சியிலுள்ள புரட்சிவாதிகளின் நிலையிலும் மாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகத்தெரிகிறது. இதன் காரணமாக டாக்டர் என். எம். பெரேராவுக்கு அடுத்த மத்திய கமிட்டிக் கூட்டத்தில் போதிய ஆதரவு கிடைக்குமென நம்பப்படுகிறது.

# இருவார காலத்தில் கூட்டு ஆட்சி ஏற்படும்

## என். எம். அறிவிப்பு

இரத்தினபுரி, திங்கள்

"இன்னும் இரண்டு வாரங்களில் இடதுசாரி முன்னணி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கம் ஏற்படும் என்று இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் என். எம். பெரேரா, பெல்மதுலை லங்கா சமசமாஜக் கட்சி வாலிப முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

"மக்களின் வாழ்க்கை நிலையை சிறப்புடையதாக்குவதற்கு எங்களால் முடியுமென்பதை நிரூபிப்பது தான் கூட்டு அரசாங்க முயற்சியின் ஒரு அம்சம்" என்றும் டாக்டர் பெரேரா தெரிவித்தார்.

டாக்டர் பெரேரா மேலும் குறிப்பிட்டதாவது:

மக்களின் வாழ்க்கை முறையை எங்களால் சீராக்க முடியும் என்பதை அவர்கள் உணர்ந்து இடதுசாரி அரசாங்கம் ஒன்றை தெரிவு செய்யும் வகையில் நாம் இந்த ஒன்றரை வருட காலமும் செயலாற்றுவோம். பின்னர் அடுத்த ஐந்து வருட காலத்திலும் பூரண சோஷலிஸத்தை அடைந்துவிடப் பாடுபடுவோம். கூட்டரசாங்கத்தின் முதல் நோக்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே.

### தீர்மான வாரம்

இந்த வாரம் கூட்டரசாங்கம் பற்றிய தீர்மானம் செய்யும் வாரமாக இருக்கும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களாக வெவ்வேறு திருப்பங்களில் நடைபெற்ற கூட்டரசாங்கம் பற்றிய பேச்சுவார்த்தைகள் இவ்வாரத்துடன் முடிந்துவிடும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிந்தாவூர் அக்கரைப்பற்று . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாப். ஐ. எச். எம். காசிம், 3-ம் வட்டாரம்: ஜனாப் ஐ. பி. பக்கீர்தம்பி. 4-ம் வட்டாரம்: ஜனாப் எஸ். எம். எச். எல். முகையதீன், 5 ம் வட்டாரம்: ஜனாப் எம். எம். மோஸாஹாஜியா, 6 ம் வட்டாரம்: ஜனாப் ஐ. எச். எல். எம். புகாரி, 7 ம் வட்டாரம்: ஏ. யு. ஸெயின், 8 ம் வட்டாரம்: திரு. எச். கணபதிப்பிள்ளை.

### காரைதீவு கிராமசபை

1-ம் வட்டாரம்: திரு. எம். சதாசிவம், 2-ம் வட்டாரம்: திரு. மா. பரசுராமன்வைத்தியர், 3-ம் வட்டாரம்: திரு. க. சாமித்தம்பி ,4-ம் வட்டாரம்: திரு. பி. பிள்ளையான்தம்பி, 5-ம் வட்டாரம்: திரு. க. இளையதம்பி, 6-ம் வட்டாரம்: திரு. க. குழந்தைவேல் (போட்டி இல்லை), 7-ம் வட்டாரம்: ஜனாப் எம். முகமது அலிபா.

இந்த நான்கு கிராமசபைகளின் தலைவர்களுக்கான தேர்தல் ஜூலை மாத முற்பகுதியில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்துசின்னம்மா

காலம் சென்ற சரவணமுத்துவின் மனைவியும், சோமசுந்தரம், பாணந்துறைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் செல்லையா, சிலாபத்துறை சுகாதாரப் பரிசோதகர் சின்னத்துரை, கொழும்பு-7 திறைசேரியைச் சேர்ந்த வல்லிபுரம், முத்துச்சாமி ஆகியோரின் பெரிய தாயாரும், திருமதி கமலாம்பிகையின் மாமியாரும், ஈஸ்வரி அரிசி ஆலையின் சொந்தக்காரர் சிவஞானத்தின் சகோதரியுமாகிய நல்லூர் லங்கா பெற்ரோல் விநியோகஸ்தராகிய திருமதி சின்னம்மா காலமாகி விட்டார். அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை காலை 10 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். 4:6

அமெரிக்க

## சமுத்திர ஆராய்ச்சி கப்பல்

கொழும்பு, திங்கள்

இந்து சமுத்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் 'பயனியர்' என்ற அமெரிக்க கப்பல் கொழும்பு வந்து சேர்ந்தது.

ஒருவாரம் வரை தங்கியிருக்கும் இக்கப்பலுள் இருக்கும் விஞ்ஞான ஆய்வு கூடத்தை விஞ்ஞானத்துறையில் அக்கறை கொண்டுள்ளவர்களும் மாணவர்களும் சென்று பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

---

## 'வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்'

களனி, திங்கள்

"நாடு அபாயமான நிலையை எதிர்நோக்குகிறது. அரசியல் சமூக, பொருளாதார நிலைமைகளில் என்னவகையான மாறுதல்கள் எதிர்காலத்தில் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக இருக்கிறோம். எனவே இலங்கையிலுள்ள தேசாபிமானிகள் சாதி, சமய, மொழி வேறுபாட்டை மறந்து நாட்டை ஒன்றுபடுத்த முன்வரவேண்டும்" என்று களனி வித்தியாலங்கார பல்கலைக்கழகத் துணைவேந்தர் வண. கிரிவதுடுவை ஸ்ரீ பிரஞ்ஞசார, கொழும்பு பிஷப், டாக்டர் அந்தோனி டி சேரத்துக்கு வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:

மத நம்பிக்கைகள் ஒருவரது தனிப்பட்ட உரிமையென்றும் அவை சமூகத்தின் ஒற்றுமையைச் சிதைக்க அனுமதிக்ககூடாதென்றும் கூறினர்.

---

யாழ்ப்பாணத்தில்

## மனநோயாளரால் தோற்றியுள்ள பிரச்னை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் நடமாடும் மனநோயாளரின் எண்ணிக்கை வரவர அதிகரிப்பதால் பொது இடங்கள் அசுத்தப்படுத்தப்பட்டு மக்களின் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிப்பது மட்டுமல்லாது பொது மக்களுக்குத் தொல்லைகளும் ஏற்படுத்தப்படக்கூடுமென்ற பீதியும் ஏற்பட்டிருக்கிறதால் மாநகரசபையின் பொறுப்பில் அம்மன நோயாளர்களை சிகிச்சைக்கு மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்ற ஓர் தீர்மானம் அடுத்த மாதாந்தக் கூட்டத்திற்குக் கொண்டுவருவதாக திரு. ஆ. துரைராசசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## காஷ்மீர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கு மூன்ரும் தரப்பினர் தலையீடு அவசியமென்றும் இதன் மூலமாக இப் பிரச்னையில் சுமுகமாக நல்லபலன் கிடைக்கலாமென்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. குறிப்பாக இந்தப்பிரச்னையில் ஐ.நா பிரதம காரியதரிசி யுதாண்ட் தலையீடு; முதலில் இரு நாடுகளின் ஏகோபித்த முடிவிற்கிணங்கவே தான் இருக்கவேண்டும் என்றும், இப்படியான முறையில் அல்லாது வேறு வழிகள் மூலம் 3-ம் நபர் தலையீடு இருக்குமானல் அது எதிர்பார்க்கும் பலனை அளிக்க மாட்டாது என்று இந்திய கல்வி மந்திரி திரு. சக்ளா தெரிவித்துள்ளார். திரு. சக்ளா நியுயோர்க்கிலிருந்து பம்பாய் போய்ச் சேர்ந்துள்ளார்.

---

யாழ்ப்பாணம், திங்கள்

நாவற்குழி கிராமசபை தேர்தலில் 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட தற்போதைய அங்கத்தவரான திரு தம்பிப்பிள்ளை 201 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ருர்.

# "அரசியல்வாதிகள் தோல்விகளை முழுமனதுடன் ஏற்கவேண்டும்"

## விளையாட்டுப் போட்டியில் எம். பி. பேச்சு

அனுராதபுரம், திங்கள்

'அரசியல் வாதிகள், விளையாட்டு பந்தய முடிவுகளை பின்பற்றி அதன்படி நடந்தால், ஏமாற்றத்திற்கும் வீண் கூச்சலுக்கும் இடமில்லாமல் போய் விடும். தற்பொழுதுள்ள அரசியல் நிலையை அவதானிக்கும் போது, அரசியல்வாதிகளுக்கு விளையாட்டுஅனுபவங்கள் அவசியம் தேவைப்படுகிறதெனத் தெரியவருகிறது.'

அனுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அனுராதபுர மாவட்ட விளையாட்டுப் போட்டியின் போது. எம். பி. திரு. கே. பி. ரத்னயக்கா மேற்கண்டவாறு கூறினர். வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பிரதம விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்தார்.

திரு. ரத்னயக்கா தொடர்ந்து கூறியதாவது:—

இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளுக்கு விளையாட்டுகள் கற்பிக்கும் ஒரே ஒரு முக்கிய பாடம் தோல்வியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதேயாகும். விளையாட்டுப்பகுதியில் அரசியல் வாதிகள் பயிற்சி பெறவேண்டுமென்று அண்மையில் யு. என். பி. தலைவர் திரு. டட்லிசேனநாயக்கா கூறியதை வரவேற்கிறேன்.

---

## முத்துக்குமாருவின் முயற்சி

கொழும்பு, திங்கள்

அவுஸ்திரேலியாவில் ஸ்தானிகராக இருக்கும் மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு நியூசிலாந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதின் பயனக அவுஸ்திரேலியாவில் இருப்பது போன்ற தேயிலை சபை நியூசிலாந்திலும் திறக்கப்படவிருக்கிறது. இலங்கைத் தேயிலைக்கு இதனல் விற்பனவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் பால் பண்ணைகளை விருத்திசெய்யும் வகையில் நியூசிலாந்தின் உதவியைப் பெறும் முயற்சியிலும் அவர் வெற்றி பெற்றுள்ளதாகத்தெரிகிறது.

தமிழில்

## தேர்ச்சியுடையோருக்கு சலுகை அளிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

வட, கீழ் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்காக, தேர்ந்தெடுக்கப்படும் 2000 சிங்கள ஆசிரியர்களுக்கான தெரிவுப் பரீட்சையில் தமிழில் தேர்ச்சி உள்ளவர்களுக்கு சலுகை அளிக்கப்படுமென அறியப்படுகிறது.

தமிழ் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதற்காக 18 வயதிற்கும் 35 வயதிற்குமிடையிலுள்ளவர்களை தேர்ந்தெடுக்கும்படி வட கீழ் மாகாணங்களிலுள்ள கல்வி அதிகாரிகளுக்கு கல்வி இலாகா அறிவித்துள்ளது. தெரிவுசெய்யப்படும் சிங்கள ஆசிரியர்கள் தொடர்ந்து ஐந்து வருடங்கள் ஒரே இடங்களில் கடமையாற்றுவார்கள்.

---

## தொழிலாளருக்கு நல்ல காலம்

கொழும்பு, திங்கள்

நாடுபூராவுமுள்ள 8 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் சம்பள நிர்ணய சபைகளுக்குட்படுத்தப் பட்டுள்ளார்களென அரசாங்கம் அறிவித்துள்ளது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Richard Harrison
in
Gladiators Seven
Techniscope - Eastman colour

அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

வெற்றிகரமான 8வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) லக்ஷ்மி (கரவெட்டி)
மற்றும் 8 திரைகளில்

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — பண்டரிபாய்
நடித்த
பராசக்தி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.